**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | |
|---|---|
| Case No. | : CC No.807/2025 |
| Deposition of witness for Prosecution | : P.W–1 |
| Name | : அங்குத்தாய், வயது 59 |
| Father Name/Husband Name | : அம்புரோஸ் |
| Village | : கோவில்பட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of June 2026.

**(Accused present.)**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 20.09.2025 ஆம் தேதி 17.00 மணிக்கு கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளரான நான், த.கா 2333 கனகராஜ் மற்றும் த.கா 897 காளிராஜ், இ.நி.கா 4426 முனீஸ்வரன் ஆகியோர் சகிதம் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்படி புகையிலை சம்பந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்த போது கோவில்பட்டி, தனுஷ்கோடியாபுரம் புது தெருவில் உள்ள முருகேசபாண்டியன் வீட்டின் அருகே வரும்போது முருகேசபாண்டியன் என்பவர் கையில் வெள்ளை நிற பிளாஸ்டிக் பையுடன் நின்று கொண்டிருந்தவரை சோதனை செய்தபோது எங்களை பார்த்தவுடன் தேவடியா மகன்களா எதுக்குடா வருகிறீர்கள் என்று அசிங்கமாக பேசி எங்களை அரசு பணியை செய்யவிடாமல் தடுத்து மற்றும் கொலை மிரட்டல் விடுத்தார்.

2 அந்த பையில் கணேஷ் 701 புகையிலை மொத்தம் 25 பெரிய பாக்கெட்டுகள் இருந்தது. ஒரு பாக்கெட்டின் விலை ரூ.120. ஒரு பாக்கெட்டின் எடை 225 கிராம் மற்றும் கூலிப் புகையிலை பெரிய பாக்கெட்டுகள் 10 எண்ணம் இருந்தது. ஒரு பாக்கெட்டின் எடை 100.8 கிராம். அதன் மதிப்பு ரூ. 208. மேற்படி பாக்கெட்டுகளின் மொத்த மதிப்பு ரூ. 3800.

3 மேற்படி நபரை விசாரித்தபோது பெங்களூரிலிருந்து மொத்தமாக வாங்கி லாப நோக்கத்துடன் அதிக விலைக்கு விற்றதாகவும், கூலி தொழிலாளர்களுக்கும், பொது மக்களுக்கும் விற்பதற்காக வைத்திருந்ததாகவும் கூறினார். மேற்படி எதிரி சட்ட விரோதமாக புகையிலை விற்க வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி, அந்த அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் போலீசார் பார்டியாகிய நாங்களே கையொப்பம் செய்தோம். மேற்படி சொத்து சகிதம் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து அன்றைய தினம் 18.30 மணியளவில் நிலைய குற்ற எண். 485/2025 U/s 296(b), 132, 351(3) BNS and 24(1) COTPA ஆக வழக்கு பதிவு செய்தேன். **(அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகவும் மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை உதவி ஆய்வாளர் சண்முகம் அவர்களின் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

4 தனுஷ்கோடியாபுரம் தெருவில் தான் லதா மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். லதா மருத்துவமனையின் எதிர் திசையில்தான் எதிரியின் வீடு உள்ளது என்றால் சரிதான். எதிரியின் வீட்டின் அருகே நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் உள்ள நபர்களுக்கு நான் ரோந்து சென்ற விவரம் தெரியும் என்றால் நாங்கள் சென்றது தெரியும், ஆனால் இதற்காக தான் எதிரியை அழைத்து வந்தது தெரியாது. எதிரியை அழைத்து வரும்போது வெறும் கையுடன்தான் வந்தோம் என்றால் சரியல்ல, எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றினோம்.

5 எதிரியிடம் வழக்கு சொத்துக்களை அழைத்து வந்த விவரம் அருகில் உள்ளவர்களுக்கு தெரியுமா என்றால் அருகில் உள்ளவர்கள் பார்த்தார்கள் ஆனால் இதற்குதானா என்று தெரியாது. அத்தாட்சியில் தனிநபர்கள் கையொப்பம் செய்ய முன்வரவில்லை என்று உதவி ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். கையொப்பமிட மறுத்த தனிநபர்கள் மீது நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் எடுக்கவில்லை. நாங்கள் உண்மையில் கையொப்பம் செய்ய தனிநபர்களை அழைத்திருந்தால் கையொப்பமிட மறுத்த தனிநபர்கள் மீது நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

6 எதிரி அசிங்கமாக திட்டியதால் அவமானம் ஏற்பட்டதாக அத்தாட்சியிலோ, போலீசார் விசாரணையிலோ துலங்காது என்றால் சரிதான். எதிரி வன்முறையை பயன்படுத்தியதால் அரசு பணியை

கைவிட்டுவிட்டு பாதியில் திரும்பியதாக வழக்கு கோப்பில் துலங்காது என்றால் சரிதான், எதிரி அரசு பணி செய்ய விடாமல் தடுத்தார். எதிரி அரசு பணி செய்யவிடாமல் தடுத்தற்கு கூடுதல் காவலர்களை வரவழைத்து அரசு பணியை செய்ததாக வழக்கு கோப்பில் துலங்குமா என்றால் சரிதான், நாங்களே நான்கு காவலர்கள் இருந்தோம். 18.30 மணிக்கு தான் எதிரியையும், அத்தாட்சியையும் நிலையத்திற்கு கொண்டு வந்தோம் என்றால் சரிதான். அதன் பிறகுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

7 நிலையம் வந்த அரை மணி நேரம் கழித்துதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல, உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. சம்பவ இடத்தில் வைத்து அத்தாட்சியை காளிராஜன் என்ற தலைமை காவலர் எழுதினார். மேற்படி விவரம் அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான். மேற்படி விவரத்தைதான் உதவி ஆய்வாளர் விசாரணையில் சொன்னேன் என்றால் காளிராஜ் என்ற தலைமை காவலர் எழுதியதை நான் சொல்லவில்லை. அத்தாட்சியுடன் நிலையம் வந்த உடனேயே எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினீர்களா என்றால் அதனை புலன் விசாரணை அதிகாரியிடம்தான் கேட்க வேண்டும்.

8. காவல் நிலைய கையிருப்பு சாட்சியாக எதிரியை அழைத்தற்கு அவர் வர மறுத்ததால் அவர் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அத்தாட்சியில் எதிரியிடம் கையொப்பம் வாங்கினீர்களா என்றால் வாங்கவில்லை. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்த வித ரோந்து பணிக்கும் நாங்கள் செல்லவில்லை என்றாலும், எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.